புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

==========================================================================

# சமுதாய முன்னெடுப்பில் அம்பையின் சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை

வெ.சந்தியா,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,
சேர்க்காடு, வேலூர்-632 115.

==========================================================================

ஆய்வுச் சுருக்கம் :

தமிழ் இலக்கிய வகைகளில் சிறுகதை இலக்கியமானது இக்கால இலக்கியம் என்னும் பிரிவில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இக்கால சூழலுக்கு தேவையான கருத்துக்களை தங்கள் சிறுகதைகள் மூலம் பல சிறுகதை எழுத்தாளர்கள் மக்கள் மனதில் விதைத்து வருகிறார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் தான் அம்பை. பெண்ணியம் என்ற தனது பார்வையிலிருந்து சற்று விலகி சமுதாயப் பார்வையில் அம்பையால் எழுதப்பட்ட சிறுகதை தான் சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை, சமுதாய முன்னெடுப்பில் இச்சிறுகதையை இக்கட்டுரை ஆராய உள்ளது.

முன்னுரை :

ஒவ்வொரு காலக்கட்டத்துக்கேற்ப சமுதாயமானது தேவைக்காகவும் சூழ்நிலையின் காரணமாகவும் பல மாற்றங்களை சந்திக்க நேரிடுகிறது. இத்தகைய மாற்றங்கள் சமுதாய முன்னெடுப்பின் துவக்கமாகவும், மனித குலத்திற்கு நன்மை விளைவிக்கக் கூடியதாகவும் இருக்கும் போது ஆரோக்கியமான சமூகம் உருவாகிறது. வளமான சமுதாயம் உருவாகுவதில் சிறுகதைகளும் பெரும்பங்கு வகிக்கின்றன. சமுதாய முன்னெடுப்பில் அம்பையின் சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை எங்ஙனம் தனது பங்கை ஆற்றியுள்ளது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கருதுகோள் :

மாற்றுத்திறனுள்ள குழந்தைகளை அனைவரும் படிக்கும் பள்ளியில் அனுமதிக்கும் போது சமூகத்தில் அவர்களுக்கான அங்கீகாரம் கிடைக்கும் என்பதும் இயற்கையாக அமைந்துள்ள திறனை கொண்டு இயல்பான வாழ்வை எதிர்நோக்க விரும்பும் அவர்களின் சிந்தனையை முன்னெடுப்பது சமுதாய முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் என்பதும் ஆய்வுக்குரிய கருதுகோளாகும்.

ஆய்வு அணுகுமுறை :

சமுதாய முன்னெடுப்பில் அம்பையின் சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை என்ற தலைப்பில் அமைந்த இந்த ஆய்வுக் கட்டுரையில் சமூகவியல் அணுகுமுறை, விளக்கவியல் அணுகுமுறை ஆகிய அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சமுதாய முன்னெடுப்பில் அம்பை :

சமுதாயம் என்பது மனித குழுக்கள் சங்கமித்து வாழும் ஒரு அமைப்பாகும். "குறிப்பிட்ட பொது நோக்கங்களை அடைவதற்காக ஒரு நிலையான உறவுமுறைகளினால் விளைவிக்கப் பட்டுள்ள மனிதக் கூட்டுத் தொகுதியே சமூகம் என்பார்". [கைலாசபதி.க.-சமூகவியலும் இலக்கியமும்- ப.9) இச்சமூகத்திற்கும் சிறுகதைகளுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதை

பெரும்பாலான சிறுகதைகள் நமக்கு உணர்த்துகின்றன. "குறிப்பிட்ட ஒரு சம்பவத்தில் மனித மனம் படும்பாட்டை அல்லது ஒரு பாத்திரம் இயங்குகின்ற முறைமையைக் குறிப்பதுவே சிறுகதை" (கார்த்திகேசு சிவத்தம்பி-தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்-ப.4) ஒவ்வொரு சிறுகதையும் சமூகத்தில் வாழும் மனித எண்ணங்களின் பிரதிபலிப்பாகவே உள்ளது. இன்றைய சமூகம் முன்னெடுத்து செல்ல வேண்டிய அம்பையுடைய சிந்தனைகளின் வெளிப்பாடாகவே சிவப்புக் கழுத்துடன் பச்சைப் பறவை அமைந்துள்ளது.

*1. குழந்தையை தத்தெடுத்து வளர்த்தல் :*

*1.1 குழந்தையை மருத்துவமனையிலிருந்து தத்தெடுத்தல் :*

திருமணமாகி பதினைந்து வருடங்கள் கடந்த பின்னும் குழந்தை பாக்கியம் கிடைக்கப் பெறாத தம்பதிகள் தான் வசந்தன் – மைதிலி வசந்தன் விளம்பரக் கம்பெனியில் பணிபுரிபவன். மைதில் பள்ளி ஒன்றில் டிராயிங் டீச்சராக இருந்தாள். வசந்தனுக்கு தெரிந்த மருத்துவர் மருத்துவமனையில் தன் தாயால் கைவிடப்பட்ட பெண் குழந்தையை அவனுக்கு தத்து கொடுத்தார். பிறப்புச் சான்றிதழியில் பெற்றோர் பெயர் மைதிலி-வசந்தன் என்று பதிவாகியது. வசந்தன் குழந்தைக்கு தேன்மொழி என பெயர் சூட்டி வீட்டிற்கு அழைத்து செல்கிறான். இதன் மூலம் இக்குழந்தை சமுதாயத்தில் தனக்கான இடத்தை பெறுகிறது. (அம்பை-சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை- பக்-45-46).

*1.2 குழந்தை மீதான அன்பும், அரவணைப்பும் :*

கையில் குழந்தையுடன் வீட்டிற்கு வந்த வசந்தனை பார்த்து அதிர்ந்து போனாள் மைதிலி, இந்த வயதில் குழந்தையை எப்படி வளர்க்க முடியும் என்ற அவளுடைய கேள்விகளுக்கெல்லாம் அவனுடைய கண்ணீர் மட்டுமே பதிலாக இருந்தது. குழந்தையை வளர்க்க வசந்தனின் அத்தை வந்தாள். குழந்தையை குளிக்க வைப்பது முதல் உணவளிப்பது வரை அத்தையுடன் சேர்ந்து எல்லா வேலைகளையும் செய்தது வசந்தன் தான். குழந்தையும் வசந்தனிடம் நன்றாக ஒட்டிக்கொண்டது. எப்போதும் அவன் தான் தூக்க வேண்டும். அவன் எங்காவது சென்று விட்டால் அவன் வந்த பின் தான் உணவு இறங்கும். ஒருமுறை நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்து வந்தவன் அருகில் வந்ததும் குழந்தை முகத்தைத் திருப்பிக் கொண்ட பின் குடிப்பதை நிறுத்த வேண்டும் என அவன் நினைத்ததிலிருந்து குழந்தையின் மீதான அவனுடைய அன்பையும் பாசத்தையும் கதையில் அறிய முடிகிறது. (அம்பை- சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை- பக்-46-47).

*1.3 குழந்தையின் குறைபாடும் (செவித்திறன் குறைபாடு) சரி செய்ய மேற்கொள்ளும் முயற்சிகளும் :*

குழந்தையின் செவிப்புலன் குறித்த ஐயங்களை மைதிலி வசந்தனிடம் கூறிய போது அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மருத்துவ சோதனைக்குக் குழந்தையை உட்படுத்த அவனைச் சம்மதிக்க வைக்க இரண்டு மாதங்கள் ஆகின. பாந்த்ராவில் இருந்த அலி யாவர் ஜங் தேசிய நிறுவனம் தான் கேட்கும் திறமைக் குறைவுக்காக ஏற்படுத்தப்பட்ட பெரிய நிறுவனம். அங்கு தான் தேன்மொழியைக் கொண்டு சென்றார்கள் ஒரு நாள் முழுவதும் நடந்த சோதனைகள் ஒன்றிலும் சாதகமான முடிவு வரவில்லை மருத்துவர்களுடன் கலந்தாலோசித்த பிறகு செவி கேட்கும் கருவி பொருத்தப்பட்டது. வெகு நாட்களுக்கு பிறகு தேன்மொழி கூறிய முதல் சொல் 'ம்மா' என்றிலாமல் 'ப்பா' என்று வந்ததும் வசந்தன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான் அதன் பிறகு தேன்மொழி அத்தையை 'தே' என்றாள். மைதிலியை தொட்டு 'ம்மா' என்றாள். (அம்பை- சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை – பக். 53-54).

*2. கல்வி கற்கும் வாய்ப்பினை உருவாக்குதல் :*

*2.1 சிறப்புப் பள்ளியில் சேர்த்தல் :*

தேன்மொழிக்கு இரண்டு வயதாகும் முன்பே எல்லா பயிற்சிகளும் தொடங்கி விட்டது. உதட்டசைவைப் பார்த்துச் சொற்களைப் புரிந்து கொள்வது, செவியில் உள்ள கருவியின் உதவியுடன் பேசுவது, பேச்சுக்கான பயிற்சிகள் அவளுக்கு கொடுக்கப்பட்டது. சிறப்புப் பள்ளியின் அனைத்து ஆசிரியர்களும் செவிப்புலன் உள்ளவர்களாகவே இருந்தது குறிப்பிடத்தக்கது. தேன்மொழியுடன்

*படிக்கும் எட்வினின் தாய் சமந்தா அவளுக்கு சைகை மொழியை கற்று தருகிறாள். (அம்பை-சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை – பக்.54-55)*

*2.2 அனைவருக்குமான பள்ளியில் சேர்த்தல் :*

*ஐந்து வயதில் சாதாரணக் குழந்தைகளுக்கான பள்ளியில் தேன்மொழியைச் சேர்த்த போது அவள் உதட்டசைவைப் படிப்பதில் மிகவும் கெட்டிக்காரியாக இருந்தாள். ஆசிரியர் கரும்பலகையின் புறம் திரும்பி ஏதாவது சொன்னால் மட்டும் புரியாமல் விழிப்பாள். வசந்தனிடம் சொல்லாமல் சமந்தாவிடம் சைகை மொழியும் கற்றபடி இருந்தாள். (அம்பை-சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை – பக்.55-56).*

*2.3 நுண்கலைக் கல்லூரியில் மேற்படிப்பு :*

*குழந்தையிலிருந்தே தேன்மொழிக்கு வரைவதிலும் களிமண்ணுடன் விளையாடி வடிவங்கள் அமைப்பதிலும் ஆர்வம் இருந்தது. மைதிலி படித்த நுண்கலைக் கல்லூரிக்கு தேன்மொழி பன்னிரெண்டாம் வகுப்புக்குப் பிறகு போவாள் என்பது ஏற்கெனவே தீர்மானமான ஒன்றாகத்தான் இருந்தது. வசந்தனும் அத்தையும் கூட அதைத்தான் விரும்பினார்கள். ஆனால் எட்வினும் அதே கல்லூரியில் சேரப்போகிறான் என்பதை மைதிலி வரவேற்ற அளவுக்கு வசந்தனும் அத்தையும் வரவேற்கவில்லை. எட்வினும் தேன்மொழியும் சைகைமொழியில் பேசிக்கொள்வது அவளுடைய பேச்சு மொழிக்கு பாதிப்பை ஏற்படுத்துமோ என்ற வசந்தனின் பயத்தையும் கதை வெளிக் கொண்ர்ந்துள்ளது. (அம்பை-சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை – பக்.56-57)*

*3. ஒலியின் ஆக்கிரமிப்பும், நிராகரிப்பும் :*

*3.1. வசந்தனின் அறிவுறுத்தலும், தேன்மொழியின் மறுப்பும் :*

*காக்ளியர் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள அறிவுறுத்தும் வசந்தனுக்கு அதனை மறுத்து தேன்மொழி தன் மன குமுறல்களை கடிதத்தின் மூலம் வெளிப்படுத்துகிறாள். அதை அவள் ஒலி உலகுக்கு அனுப்பும் ஒரு செய்தி போல் எழுதியிருந்தாள் "நான், நாங்கள் – எட்வினும் நானும் வாழும் உலகில் ஒலி இல்லை. செவிக்கருவி மூலம் ஒலிச் சொட்டுகள் விழும் அவை சூடானவை நெருப்பாய்ச் சுடுபவை ஒலி ஒரு சாட்டை. வலியைத் தருவது. அதுதான் ஒலியுடன் எங்கள் உறவு எங்கள் உலகில் வண்ணங்கள் உண்டு. காட்சிகள் உண்டு" என தன் மன உணர்வுகளை வெளிப்படுத்தியிருந்தாள். அவர்கள் உலகில் ஒலி ஒர் ஆக்கிரமிப்பாகவும் அது மௌனத்தை வீழுத்துவதாகவும் இருப்பதை கதை சமூகத்திற்கு உணர்த்தியுள்ளது. (அம்பை-சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை – பக்.61-62).*

*3.2 மொழி ஒரு தொடர்பு, ஒலி அல்ல :*

*மொழி என்பது ஒரு தொடர்பு. அது ஒலி இல்லாமலும் நிகழலாம். பள்ளியிலிருந்து வரும் குழந்தை காலணி, பள்ளிப்பை இவற்றைத் தூக்கிப் போடுவதைப் போல செவி கேட்கும் கருவியையும் எடுத்து விடுவதை ஆசிரியர் கதையில் பதிவு செய்திருப்பதன் மூலம் குழந்தைகள் வற்புறுத்தலினாலேயே அதை அணிந்திருப்பதை உணரமுடிகிறது. செவி கேட்கும் கருவியில் மோட்டார் சத்தம், பறவைகளின் கூச்சல், விமானம் பறக்கும் ஒலி, கடலலையின் ஓசை, பேச்சொலி எல்லாமே ஒரே அளவில் கேட்பதையும், தூரம் அருகாமை என்ற பேதம் இல்லாமல் அதில் பேச்சொலியைப் பாகுபடுத்தி எடுப்பது மிகவும் சிரமமான வேலை என்பதையும் கதை வெளிப்படுத்தியுள்ளது. செவிப்புலன் அற்றவர்களும் பேச முடியும் என்பதற்கு சான்றாக சிறப்புப் பள்ளியில் ஏற்பாடு செய்திருந்த விழாவில் பதினைந்து வயது சிறுவன் ஒருவன் மேடையில் பத்து நிமிடங்கள் அவன் எப்படி பேச கற்றுக்கொண்டான் என கூறியிருப்பதை கதையில் குறிப்பிட்டுள்ளது செவித்திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு தன்னம்பிக்கை அளிக்கும் விதமாக உள்ளது. (அம்பை-சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை – பக்.44-60).*

*முடிவுரை :*

*சொந்த குழந்தைக்கு நிகராக அன்பையும், அரவணைப்பையும் தத்தெடுத்து வளர்க்கப்படும் குழந்தைக்கும் கொடுக்க முடியும் என்பதை கதையின் மூலம் அறிய முடிகிறது. குழந்தையின் செவித்திறன் குறைப்பாட்டை பற்றி அறியும் போது அதை சரி செய்ய பெற்றோராக மைதிலி-வசந்தன் எடுத்திருக்கும் முயற்சிகள் கதைக்கு உயிரோட்டத்தை அளித்துள்ளன. செவித்திறன் குறைபாடு உடையவர்களுக்கு பள்ளி, கல்லூரிகளில் சமமான கல்வி வாய்ப்பு அளிக்கப்படும் போது இச்சமுதாயத்தில் அவர்களுக்கான உரிமையை நிலைநாட்ட முடியும் என்பதையும் கதை உணர்த்தியுள்ளது. செவித்திறன் குறைபாடு உடையவர்கள் சந்திக்கும் சவால்களும், அத்தனை சவால்களையும் கடந்து வருபவர்களை அவரவர் விருப்பத்திற்கேப வாழ அனுமதி அளிக்க வேண்டும் என்ற கருத்தை இச்சமூகத்தின் முன் வைத்துள்ளது மொழி என்பது ஒருவரை ஒருவர் தொடர்பு கொள்ளும் கருவி. அவரவர் விருப்பத்திற்கேற்ப அது ஒலியுடனும் நிகழலாம், ஒலி இல்லாமலும் நிகழலாம்.*

*பார்வை நூல்கள் :*


*1. அம்பை - சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை, காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்., 669, கே.பி.சாலை, நாகர்கோவில்-629001. முதற்பதிப்பு-2019.*

*2. கார்த்திகேசு சிவத்தம்பி - தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-600098. முதற்பதிப்பு-2013.*

*3. கைசாசபதி.க. - சமூகவியலும் இலக்கியமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-600098. முதற்பதிப்பு-1979.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********